## ரெயில் நிறுவன தூண்களில்

# சுவரொட்டி ஒட்டிய 4 நிறுவனங்கள் மீது போலீசில் புகார்

சென்னை, அக்.6–

சென்னை மெட்ரோ ரெயில் நிலைய சுவர்கள் மற்றும் கட்டமைப்புகளில் சுவரொட்டிகள், ஸ்டிக்கர்களை ஒட்ட தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதை மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்; 6 மாத சிறைத்தண்டனை பெற்றுத்தருவதுடன், ஆயிரம் ரூபாய் அபராதமும் வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இதனையும் மீறி பல விளம்பரதாரர்கள் மெட்ரோ ரெயில் தூண்களில் சுவரொட்டிகளை ஒட்டியது கண்டறியப்பட்டு உள்ளது.

அந்தவகையில் மீனம்பாக்கம், திருநகர், சைதாப்பேட்டை, திருமங்கலம் ஆகிய 4 இடங்களில் உள்ள விளம்பரதாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி மீனம்பாக்கம் போலீஸ் நிலையத்தில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் புகார் அளித்து உள்ளனர். தொடர்ந்து இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறினார்கள்.